*2022 மார்ச் 21]*

**24—**

## நியாய விலைக் கடைகள்

***443—திரு. க. செல்வராஜ்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூரில் நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் திருப்பூர் தெற்கு தொகுதிக்குள் ஏற்கெனவே 97 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, திருப்பூரில் நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.*

**திரு. க. செல்வராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தெற்கு தொகுதி மற்றும் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வந்தாரையெல்லாம் வாழ வைக்கும் தொழில் நகரமாக விளங்கிவரும் திருப்பூர் மாநகரப் பகுதிகளில் அமைந்துள்ள பெரும்பாலான நியாய விலைக் கடைகளில் 1,000–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருக்கின்ற காரணத்தால் பொருட்களை வாங்குவதற்கு நாள் கணக்கில் வரிசையில் நின்று காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.*

*நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு, நடைபெற்றுவருகிற நல்லாட்சியில் பனியன் தொழில் மேலும் சிறக்குமென நம்பிக்கையில், இனிவருங்காலங்களில், மேலும் மக்கள்தொகை பெருகும் வாய்ப்பு இருப்பதாலும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, 1,000–க்கும் மேற்பட்ட அட்டைதாரர்களைக் கொண்ட நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரித்து முறைப்படுத்தினால்,*

ஏழையெளிய மக்கள் மற்றும் நடுத்தர தொழிலாளர்களைக் கொண்ட திருப்பூர் மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள் என்பதை இம்மாமன்றத்தில் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூரிலுள்ள நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மேலும், நியாய விலைக் கடைகளை அதிகப்படுத்தும் நோக்கம் அரசிடம் இருக்குமேயானால், அது எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, திருப்பூர் தெற்கு தொகுதியில் மட்டுமல்லாமல் திருப்பூர் நகரத்தில் ஏறத்தாழ 1,000 குடும்ப அட்டைகளுக்குமேல், அதாவது 1,000 மற்றும் 1,000—க்குமேல் குடும்ப அட்டைகள் உள்ள இடங்களில் 30 கடைகள் வரை இயங்கிவருகின்றன. ஆக, 800 குடும்ப அட்டைகள் இருந்தாலே ஒரு முழுநேர நியாய விலைக் கடை திறக்கலாம். 2021—2022 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, 3 விதமான முழுநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 7 பகுதிநேரக் கடைகள் திருப்பூர் நகரத்தில் திறக்கப்பட்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல், ஏற்கெனவே அவருடைய கோரிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த ஆண்டு ஜனவரி மாதம், 12—1—2022 அன்றுதான் அனுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றி நிச்சயம் அரசு பரிசீலிக்கும். 1,000 குடும்ப அட்டைகள் உள்ள கடைகளில், பிரிக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டு கடை வசதி, போகக்கூடிய சாலை வசதி, மின்சார வசதி ஆகியவை வழங்கப்பட வேண்டும். முக்கியமாக நியாய விலைக் கடை திறப்பதற்கு கடைகள் கிடைக்க வேண்டும். ஏனென்றால், நகரங்களில் பெரும்பாலும் கடைகள் கிடைப்பது அரிதாக உள்ளது. அதற்குரிய ஏற்பாட்டினை

*2022 மார்ச் 21]*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்கின்றபோது, நிச்சயமாக அதிகமான குடும்ப அட்டைகள் உள்ள கடைகளைப் பிரித்து வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.*

**திரு. க. செல்வராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, எந்தப் பகுதியில் நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டும் என்பது குறித்து ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பிய பரிந்துரையை நிச்சயமாக அரசு ஏற்று, விரைவில் புதிய கடைகள் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள், நடமாடும் நியாய விலைக் கடைகள் என்று துவக்கப்பட்டு, அவை சரிவர இயங்காமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் துணைக் கிராமங்கள் அதிக அளவில் இருக்கின்றன. பேரூராட்சிகள், வேட்டவலம், பெண்ணாத்தூர் போன்ற பேரூராட்சிகள், வேடந்தவாடி போன்ற கிராமங்களில் 4 துணைக் கிராமங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட துணைக் கிராமங்களில், அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற மக்கள் வைக்கின்ற கோரிக்கை "எங்களுக்கென்று தனியாக ஒரு நியாய விலைக் கடை வழங்க வேண்டும்" என்பதுதான். ஆகவே, நம்முடைய அரசு அந்தத் துணைக் கிராமங்களுக்கெல்லாம் நடமாடும் நியாய விலைக் கடைகளாக அல்லாமல், தனியாக நியாய விலைக் கடைகளை திறந்து வைத்தால்தான், அப்பகுதி ஏழை, எளிய மக்கள் தங்கள்* ration *பொருட்களை வாங்குவதற்கு ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட துணைக் கிராமங்களில் உள்ள*

அனைத்துப் பகுதிகளிலும், புதிதாக பகுதிநேர நியாய விலைக் கடைகளையும், பேரூராட்சிகளில் நியாய விலைக் கடைகளையும் பிரித்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல், மக்களுக்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. அதைத்தான் ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். நிதி நெருக்கடி இருந்தாலும், உறுப்பினர்கள் நீங்கள் சொல்லியிருக்கிற பகுதியில் தேவைப்படுகின்ற கடைகளைத் திறப்பதற்கு கோரிக்கை வருகின்றபட்சத்தில், கிராமங்களில் 500 அட்டைகள் வரை இருந்தால், முழுநேர நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம், அதே சமயத்தில் சுமார் 150 குடும்ப அட்டைகள் இருந்தால், பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகின்றபட்சத்தில், நிச்சயமாக அந்தப் பகுதியில் கடைகள் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**25—**

## பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***7530—திரு. சீ. கதிரவன்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மண்ணச்சநல்லூர் தொகுதி, ச. கண்ணனூர் பேரூராட்சியில் மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*